අධ්‍යාපන, උසස් අධ්‍යාපන සහ වෘත්තීය අධ්‍යාපන අමාත්‍යාංශය 'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு 'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
Ministry of Education, Higher Education and Vocational Education 'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/09/12/06/05/01-2026

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2025.09.11

**சுற்றுநிருப இலக்கம் – 30/2025**

*அனைத்து மாகாணப் பிரதம செயலாளர்கள்,*
*அனைத்து மாகாணக் கல்விச் செயலாளர்கள்,*
*அனைத்து மாகாணக் கல்விப் பணிப்பாளர்கள்,*
*அனைத்து வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,*
*அனைத்து கோட்டங்களுக்குப் பொறுப்பான பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளர்கள்,*
*அனைத்து பிரிவெணாதிபதிகள்,*
*அனைத்து அரச மற்றும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலை அதிபர்கள்*

## பாடசாலை தவணை அட்டவணை - 2026

01. 2026 ம் ஆண்டில் பின்பற்ற வேண்டிய பாடசாலைத் தவணை அட்டவணை மற்றும் உரிய விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**I. சிங்களம் மற்றும் தமிழ் பாடசாலைகளுக்கு**

| தவணை | தவணை நடைபெறும் காலப் பகுதி |
|---|---|
| முதலாம் தவணை | **முதலாம் கட்டம்**<br>2026.01.01 வியாழன் முதல் 2026.02.13 வெள்ளி வரை<br>**(2026.02.14 ம் திகதி முதல் 2026.03.02 ம் திகதி வரையில் விடுமுறை வழங்கப்படும்)** |
| | **இரண்டாம் கட்டம்**<br>2026.03.03 செவ்வாய் முதல் 2026.04.10 வெள்ளி வரை<br>**(2026.04.11 ம் திகதி முதல் 2026.04.19 ம் திகதி வரையில் விடுமுறை வழங்கப்படும்)** |
| இரண்டாம் தவணை | 2026.04.20 திங்கள் முதல் 2026.07.24 வெள்ளி வரை |
| மூன்றாம் தவணை | **முதலாம் கட்டம்**<br>2026.07.27 திங்கள் முதல் 2026.08.07 வெள்ளி வரை<br>**(2026.08.08 ம் திகதி முதல் 2026.09.06 ம் திகதி வரையில் விடுமுறை வழங்கப்படும்)** |
| | **இரண்டாம் கட்டம்**<br>2026.09.07 திங்கள் முதல் 2026.12.04 வெள்ளி வரை |

அ.ப.பா

ගරු අමාත්‍යතුමිය / கௌரவ அமைச்சர் / Hon. Minister +94112784832 +94112784825 minister.education@moe.gov.lk
ලේකම් / செயலாளர் / Secretary +94112784811 +94112785162 secretary.education@moe.gov.lk moesecretaryoffice@gmail.com

**II. முஸ்லிம் பாடசாலைகளுக்கு**

| **தவணை** | **தவணை நடைபெறும் காலப் பகுதி** |
|---|---|
| முதலாம் தவணை | **<u>முதலாம் கட்டம்</u>**<br>2026.01.01 வியாழன் முதல் 2026.02.13 வெள்ளி வரை<br>**(2026.02.14 ம் திகதி முதல் 2026.03.22ம் திகதி வரையில் விடுமுறை வழங்கப்படும்)** |
| | **<u>இரண்டாம் கட்டம்</u>**<br>2026.03.23 திங்கள் முதல் 2026.04.10 வெள்ளி வரை<br>**(2026.04.11 ம் திகதி முதல் 2026.04.19 ம் திகதி முதல் விடுமுறை வழங்கப்படும்)** |
| | **<u>மூன்றாம் கட்டம்</u>**<br>2026.04.20 திங்கள் முதல் 2026.04.30 வியாழன் வரை<br>**(2026.05.01 ம் திகதி முதல் 2026.05.03 ம் திகதி வரையில் விடுமுறை வழங்கப்படும்.)** |
| இரண்டாம் தவணை | **<u>முதலாம் கட்டம்</u>**<br>2026.05.04 திங்கள் முதல் 2026.05.26 வியாழன் வரை<br>**(2026.05.27 ம் திகதி முதல் 2026.05.31ம் திகதி வரையில் விடுமுறை வழங்கப்படும்)** |
| | **<u>இரண்டாம் கட்டம்</u>**<br>2026.06.01 திங்கள் முதல் 2026.07.31 வெள்ளிக் வரை |
| மூன்றாம் தவணை | **<u>முதலாம் கட்டம்</u>**<br>2026.08.03 திங்கள் முதல் 2026.09.02 புதன் வரை<br>**(2026.09.03 ம் திகதி முதல் 2026.09.06ம் திகதி வரையில் விடுமுறை வழங்கப்படும்)** |
| | **<u>இரண்டாம் கட்டம்</u>**<br>2026.09.07 திங்கள் முதல் 2026.12.04 வெள்ளி வரை |

02. அவ் அம் மாகாணக் கல்வி அமைச்சுக்கள் தத்தமது மாகாணங்களுக்கு விசேடமான நிலைமைகளுக்கு அமைவாக பாடசாலை தவணை அட்டவணையில் மாற்றங்களை செய்ய உத்தேசிப்பின், கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டும். 1997 ஆகஸ்ட் மாதம் 08ம் திகதியுடைய கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சின் செயலாளரின் இலக்கம் 97/15 உடைய சுற்றுநிருபத்திற்கமைய இந்த தவணை அட்டவணையில் மாற்றங்களை செய்ய முடியும்.

2.1. பாடசாலை தவணை அட்டவணை தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள 1997 ஆகஸ்ட் மாதம் 08ம் திகதியுடைய கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சின் செயலாளரின் இலக்கம் 97/15 உடைய சுற்றுநிருபத்திற்கமைய அனைத்துப் பாடசாலைகளும் ஒரு வருடத்தில் 210 நாட்கள் நடாத்தப்பட வேண்டும் என வலியுறுத்துவதுடன், 2026ம் ஆண்டில் வரும் அரசாங்க விடுமுறை தினங்கள் மற்றும் பாடசாலைப் பரீட்சை நாட்களுக்கமைய 210 நாட்கள் பாடசாலை நடாத்த முடியாதுள்ளது. ஆகையால், 2026 ம் ஆண்டில் அரச மற்றும் அரச அனுமதி பெற்ற தனியார் பாடசாலைகள் மற்றும் அனுமதி பெற்ற பிரிவெனாக்கள் 197 நாட்கள் பாடசாலை நடாத்த வேண்டும்.

2.2. 2026ம் ஆண்டிற்கான க.பொ.த (உ,த) பரீட்சை ஆகஸ்ட் மாதத்திலும், 2025 (2026) – க.பொ.த (சாதாரண தர) பரீட்சை பெப்ரவரி மாதத்திலும் 2026 – க.பொ.த (சாதாரண தரம்) பரீட்சை டிசம்பர் மாதத்திலும் நடாத்தப்படவுள்ளதால், பாடசாலை விடுமுறைக் காலம் தவணை அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு வழங்கப்படல் வேண்டும்.

03. அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள பொது விடுமுறை தினங்கள், ஞாயிற்றுக் கிழமை நாட்கள் மற்றும் தவணை விடுமுறை காலங்களில் அனைத்துப் பாடசாலைகளும் மூடப்படும். இருப்பினும் விசேடமான காரணம் ஒன்றிற்காக பாடசாலை நடாத்தப்பட வேண்டிய தினம் ஒன்றில் பாடசாலையை மூடுவதற்கு நேரிடும் பட்சத்தில் அத் தினத்திற்குப் பதிலாக வேறு தினமொன்றில் பாடசாலை நடாத்தப்படல் வேண்டும்.

04. 2026ம் ஆண்டிற்குரிய அரசாங்க விடுமுறை நாட்காட்டி இத்துடன் தங்களுக்கு அனுப்பிவைக்கப்படுவதுடன் (இணைப்பு-I), பாடசாலை செயற்பாடுகள் உள்ளடங்கிய நாட்காட்டி இவ் அமைச்சின் இணையத் தளத்தில் (www.moe.gov.lk) பிரசுரிக்கப்படும்.

இந்த தவணை அட்டவணையை நடைமுறைப்படுத்தும் போது ஏதேனும் பிரச்சனைகள் ஏற்படின் அது தொடர்பில் பாடசாலை செயற்பாடுகள் கிளையின் கல்விப் பணிப்பாளரிடம் விசாரிக்குமாறு தயவுடன் அறியத் தருகின்றேன்.

தொலைபேசி இலக்கம் - 011- 2784845

நாலக கலுவெவ
செயலாளர்

பிரதிகள் :-

1. பணிப்பாளர் நாயகம் (தேசிய கல்வி நிறுவகம்)
2. பரீட்சை ஆணையாளர் நாயகம்
3. கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
4. பிரதம ஆணையாளர் – ஆசிரியர் கல்வி
5. கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சின் பதவி நிலை உத்தியோகத்தர்கள்
6. பொது முகாமையாளர், இலங்கை புகையிரத திணைக்களம்
7. தலைவர், இலங்கை போக்குவரத்து சபை

இணைப்பு-I

# அரசாங்க விடுமுறை தினங்கள் - 2026

| | | | | |
|---|---|---|---|---|
| ஜனவரி | 03 | சனி | துருத்து முழு நோன்மதி தினம் | * = |
| ஜனவரி | 15 | வியாழன் | தமிழ் தைப்பொங்கல் தினம் | * = |
| பெப்ரவரி | 01 | ஞாயிறு | நவம் முழு நோன்மதி தினம் | * = |
| பெப்ரவரி | 04 | புதன் | சுதந்திர தினம் | * = |
| பெப்ரவரி | 15 | ஞாயிறு | மகா சிவராத்திரி தினம் | * = |
| மார்ச் | 02 | திங்கள் | மெதின் முழு நோன்மதி தினம் | * = |
| மார்ச் | 21 | சனி | ஈதுள் பித்ர் (ரமழான் நோன்புப் பெருநாள் தினம்) | * = |
| ஏப்ரல் | 01 | புதன் | பக் முழு நோன்மதி தினம் | * = |
| ஏப்ரல் | 03 | வெள்ளி | பெரிய வெள்ளி தினம் | * = |
| ஏப்ரல் | 13 | திங்கள் | சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு தினத்திற்கு முந்தைய தினம் | * = |
| ஏப்ரல் | 14 | செவ்வய் | சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு தினம் | * = |
| மே | 01 | வெள்ளி | வெசாக் முழு நோன்மதி தினம் | * = |
| மே | 01 | வெள்ளி | உலக தொழிலாளர் தினம் | * = |
| மே | 02 | சனி | வெசாக் முழு நோன்மதி தினத்திற்கு பிந்தைய தினம் | * = |
| மே | 28 | வியாழன் | ஈதுல் அல்ஹா (ஹஜ்ஜுப் பெருநாள் தினம்) | * = |
| மே | 30 | சனி | அதி பொசொன் முழு நோன்மதி தினம் | * = |
| ஜூன் | 29 | திங்கள் | பொசொன் முழு நோன்மதி தினம் | * = |
| ஜூலை | 29 | புதன் | எசல முழு நோன்மதி தினம் | * = |
| ஆகஸ்ட் | 26 | புதன் | (மீலாதுன் நபி) நபி நாயகத்தின் பிறந்த தினம் | * = |
| ஆகஸ்ட் | 27 | வியாழன் | நிகிணி முழு நோன்மதி தினம் | * = |
| செப்டெம்பர் | 26 | சனி | பிணர முழு நோன்மதி தினம் | * = |
| ஒக்டோபர் | 25 | ஞாயிறு | வப் முழு நோன்மதி தினம் | * = |
| நவம்பர் | 08 | ஞாயிறு | தீபாவளி வைபவ தினம் | * = |
| நவம்பர் | 24 | செவ்வாய் | இல் முழு நோன்மதி தினம் | * = |
| டிசம்பர் | 23 | புதன் | உந்துவம் முழு நோன்மதி தினம் | * = |
| டிசம்பர் | 25 | வெள்ளி | நத்தார் வைபவ தினம் | * = |

* அரசாங்க விடுமுறை நாட்கள் = வங்கி விடுமுறை நாட்கள்